[2005 மார்ச் 23

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்து இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, சிவகங்கை கண்டதேவி தேரை ஓட்டிய பெருமைக்குரிய நம்முடைய ஆட்சியிலே ஐந்து அற்புதத் தேர்களைக் கொண்ட புதுக்கோட்டை திருக்கோயிலின் அந்தத் தேர்களையும் ஓட்டி பிரம்மோற்சவம் என்று சொல்லக்கூடிய பெரும் திருவிழாவை நடத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற திருக்கோயில்களின் திருப்பணிக்காக 15 இலட்சம் ரூபாய்க்கு மேல் மதிப்பீடுகள் பெறப்பட்டுள்ள நிலையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் உபயதாரர்களை அணுகி இப்பணியை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தால், துறையின்மூலம் தேவையான மானியத் தொகை வழங்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். ஒரே திருக்கோயிலில் ஐந்து திருத்தேர்கள் இருப்பது ஒருசில திருக்கோயில்கள் மட்டுமே. இதில் தங்கள் புதுக்கோட்டை தொகுதியைச் சேர்ந்த இத்திருக்கோயிலும் ஒன்றாகும். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான ஐந்து திருத்தேர்களின் தேரோட்டத்தையும், பிரம்மோற்சவத்தையும் விரைவில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிவிப்புகள்

(அ) கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதி நிலை அறிக்கை, 2004-2005, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2004–2005 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்கள் குறித்த இறுதித் துணை நிதி நிலை அறிக்கை. பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004–2005 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது.

Message

"In pursuance of Clause (2) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Surjit Singh Barnala, Governor of

Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for further Grants for the Financial Year 2004–2005."

முற்பகல் 10–05

4. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2004–2005, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2004–2005 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்கள் குறித்த மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2004–2005 ஆம் ஆண்டின் கூடுதல் செலவினங்களுக்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 21–3–2005 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள இறுதித் துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2004–2005 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS